1992 பிப்ரவரி 10] [திரு. கி. தர்மலிங்கம்]

இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1981-82 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் (வணிகம்) சுற்றுப்புறச் சூழல் மற்றும் வனத்துறை தொடர்பான பத்திகள் மீது பொது நிறுவனங்கள் குழு 1989-90, அளித்த 27-வது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய குழுவின் 32-வது அறிக்கையை அளிக்கின்றேன்.

முற்பகல் 11–20

இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 1981–82-ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் (வணிகம்) கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை தொடர்பான பத்திகள் குறித்து பொது நிறுவனங்கள் குழு (1989–90) அளித்த இருபத்தொன்றாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய குழுவின், முப்பத்தி மூன்றாவது அறிக்கை.

மற்றும், இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1981-82-ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் (வணிகம்) பொதுப்பணித்துறை குறித்த பத்திகள் மீது பொது நிறுவனங்கள் குழு (1986–87) அளித்த ஐம்பத்தொன்றாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய குழுவின் முப்பத்தி நான்காவது அறிக்கை ஆகியவற்றை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

5. சட்டமுன்வடிவுகள்—ஆய்வு செய்தல்

(அ) எதிர்பாராச் செலவு நிதிய (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்டமுன்வடிவுகள், ஆய்வு செய்தல். 1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/1992)—மாண்புமிகு நிதியமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (திருத்த) சட்டமுன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/1992) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

---

* 7—2—1992 ஆம் நாளிட்ட அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்பாராச் செலவு நிதியத்தை அதிகரிக்க வேண்டும் என்கிற சட்டமுன்வடிவை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பேரவையின் ஆய்வுக்கு வைத்திருக்கிறார்கள். இது சட்டமுன்வடிவாக வருவதற்கு முன்னால் அவசரச் சட்டமாகப் பிறப்பிக்கப்பட்டு இப்போது சட்டமாக்குகிற வகையில் சட்டமுன்வடிவாக இங்கே வைக்கப்பட்டிருக்கிறது. எந்தச் செலவினங்களாக இருந்தாலும் சட்டப் பேரவையின் அனுமதி பெற்ற பிறகே பொது நிதியிலிருந்து எடுத்துச் செலவு செய்ய வேண்டும் என்பது விதியாக இருக்கிறது. சட்டப் பேரவையில் அது வைக்கப்பட்டு அனுமதி பெறவேண்டும். ஆனால் சில செலவினங்கள், சில செலவுகள் எதிர்பாராத வகையிலே வரக்கூடும், எனவே, அவசரச் செலவுகளுக்கு பணத் தேவைக்கு ஒரு நிதியம்—அதுதான் எதிர்பாராச் செலவு நிதியம், அந்த எதிர்பாராச் செலவு நிதியத்திலிருந்து எடுத்து செலவு செய்யப்படுகிற தொகைக்கு பின்னர் சட்டப்பேரவையில் அனுமதி பெற்றவுடனே மீண்டும் அந்தத் தொகை அந்த நிதியத்திற்குச் சென்று விடும். அந்த நிதியத்தை அதிகரிக்கிற அதிகாரம் சட்டப் பேரவைக்கு மட்டுமே உண்டு. சட்டப் பேரவை மட்டுமே செய்ய வேண்டும். பொதுவாக எதிர்பாராச் செலவுகள் என்று சொன்னால் யாருமே எதிர்பார்க்காத செலவுகள். திடீரென்று வந்த செலவுகளாக இருக்க வேண்டும். இந்தச் சட்டமுன்வடிவில் சொல்லப்பட்டிருக்கிற செலவுகளில் எல்லாம் பெரும்பாலான செலவுகள் முன்பே எதிர்பார்த்திருக்கக்கூடிய செலவுகள்தான். பொங்கல் இனாம், வேஷ்டி சேலைகள் வழங்குதல், தெரு விளக்குகள் பராமரிப்பு, உர மானியம் என்று வரிசையாக நிதியமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். இவைகள் எல்லாம் எதிர்பார்த்த செலவுகள் தானே தவிர, எதிர்பார்க்காத செலவுகள் அல்ல. எனவே, இதற்கென பட்ஜெட்டில் செலவுத் தொகை ஒதுக்கியிருக்க வேண்டும். ஒதுக்காதது அவ்வளவு முறையாக இருக்காது. என்றாலும் வருங்காலத்திலாவது இப்படி நடைபெறக்கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நாம் இரண்டு பேருமே இதைக் கடுமையாக எதிர்த்து வந்தவர்கள். எதிர்பாராச் செலவினத்தை அதிகரிக்கக்கூடாது. அதிகரிப்பதாக இருந்தால் அதை அவசரச் சட்டமாகக் கொண்டு வந்து அதிகரிப்பது முறையாகாது என்று சொல்லி வந்திருக்கிறோம். எனவே, வருங்காலத்திலாவது இப்படி செய்வதைத் தவிர்க்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதியமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்பாராச் செலவுகளை ஈடுகட்டுகிற வகையில் தான் நிரந்தரமாக சட்ட அனுமதியின் பேரில் ரூபாய் 75 கோடி நிரந்தரமாக ஒதுக்கித் தரப்பட்டிருக்

1992 பிப்ரவரி 10] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

கிறது. சில வேளைகளில் சட்டமன்றம் கூடாத நிலையில், சட்டமன்றத்தினுடைய அனுமதி பெற இயலாத நிலை ஏற்படுகிறபோது எதிர்பாராச் செலவுகளைச் செய்து தீர வேண்டிய இக்கட்டான கட்டம் அரசுக்கு ஏற்படுகிறது. அப்படி ஏற்படுகிறபோது அந்த நிதியினுடைய அளவைக் கூட்டவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அப்படி ஏற்படுகிறபோதுதான் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அந்தத் தொகையை அதிகப்படுத்தி அதற்கான சட்டத்திருத்தத்தைக் கொண்டு வர வேண்டியிருக்கிறது.

முற்பகல் 11-25

சட்டமன்றம் கூடாத நேரத்தில் அவசரப் பிரகடனத்தின் மூலமாகத்தான் அதைப்பெற வேண்டியிருக்கிறது. அப்படி பலதடவைகள் இதற்கு முன்னால் பல ஆண்டுகள் கூடுதல் நிதிகள் பெறப்பட்டிருக்கின்றன. பிறகு அவை சட்டமன்றத்தினுடைய அனுமதியும் பெற்று, முறைப்படி பிற கணக்கில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இப்போது இந்த நிதியாண்டில் சிறு நிலங்களில் பயிரிடுபவர்களுக்கும், வளம்குன்றிய நிலையில் பயிரிடுபவர்களுக்கும் உரத்திற்கான உதவித் தொகை அளித்தல், தமிழ்நாடு மின் விசை அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்திற்கு உதவி அளித்தல், ஊராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் தெரு விளக்குகளைப் பேணி வருதல், 1991-ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட, சில நிலங்களில் பயிரிடுபவர்களுக்கும், வளம் குன்றிய நிலங்களில் பயிரிடுபவர்களுக்கும் நிவாரணம் அளித்தல், 1992-ஆம் ஆண்டு பொங்கல் விழாவிற்கு இலவசமாக வேட்டிகளும், சேலைகளும் வழங்குதல் ஆகிய திட்டங்களை நிறைவேற்றுவதற்காக கூடுதல் செலவு எதிர்பாராத வகையில் ஏற்பட்டுவிட்டது. ஆகவே இந்த வெள்ளத்தால் பாதிக்கப்படுவது, வறட்சியால் பாதிக்கப்படுவது போன்ற நிகழ்ச்சிகள் எதிர்பாராத வகையில்தான் ஏற்படுகின்றன.

அதுமட்டுமல்லாமல் வேட்டி, சேலைகளை ஏழைகள், வறுமைக்கோட்டிற்குக் கீழே இருப்பவர்களுக்கு அளிப்பது என்ற ஒரு முடிவு, அண்மையில் எடுக்கப்பட்டதன் காரணமாக அதுவும் எதிர்பாராத செலவாக அமைந்து விட்டது. அந்த வகையிலேதான் மார்ச் திங்கள் 31-ஆம் தேதி முடிகின்ற அளவிற்கு ஜனவரி 10-ஆம் தேதியிலிருந்து ரூ. 150 கோடியாக ஆக்கவேண்டுமென்று கூறப்பட்டிருக்கின்றது. எதிர்பாராச் செலவுகள் செய்தாலும் பிறகு துணை மானியக் கோரிக்கைகள் கொண்டு வந்து இந்த அவையினுடைய முழு அனுமதியையும் பெற்றுத்தான் பிறகு அவற்றிற்கான பணம் எடுக்கப்பட்டு, மறுபடியும் அந்த நிதியத்திற்கு கொண்டு சேர்க்கப்படும்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1992 பிப்ரவரி 10

1—4—1992-க்குப் பிறகு இதனுடைய அளவு ரூ. 75 கோடியாக மீண்டும் அமையும். அது வரையிலும் எதிர்பாராத வகையில் ஏற்படும் இந்தச் செலவுகளை ஈடுகட்டுவதற்கும் துணை மானியக் கோரிக்கைகள் கொண்டு வருகின்ற வகையிலே இது தேவைப் படுகின்றது. துணை மானியக் கோரிக்கைகள் வந்து, இந்த அவையும் அனுமதி அளித்ததற்குப் பிறகு, அதற்குரிய நிதி இதிலே சேர்க்கப்பட்டதற்குப் பிறகு, வழக்கம் போல இருக்கின்ற ரூ. 75 கோடி நமக்கு போதுமானதாக அமையும். ஆகவேதான், இந்தச் சட்ட முன்வடிவை ஏற்றுக்கொள்ளுமாறு இந்த அவையைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படு கிறது.

ஏற்போர் " ஆம் " என்க. (ஆம்)
மறுப்போர் " இல்லை " என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படு கிறது.

ஏற்போர் " ஆம் " என்க. (ஆம்).
மறுப்போர் " இல்லை " என்க. (இல்லை).
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன் வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேர வையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் " ஆம் " என்க. (ஆம்).
மறுப்போர் " இல்லை " என்க. (இல்லை).
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதியமைச்சர்,

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'' 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 4]1992.) நிறைவேற்றப்பெற வேண்டும் ''
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் '' ஆம் '' என்க. (ஆம்)

மறுப்போர் '' இல்லை '' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஆ) பச்சையப்ப அறக்கட்டளை மற்றும் பட்டியல் பொதுப் பொறுப்பாட்சியமைப்புகள் மற்றும் நிலைக் கட்டளைகள் (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்டமுன் வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதேபோன்று அடுத்த சட்டமுன்வடிவும் கல்வி அமைச்சருடைய இதே பொருள் தொடர்புடையது. (குறுக்கீடு). அது அமைச்சர் வேறு. (குறுக்கீடு) இவை இரண்டையும்தான் சேர்த்து எடுக்க முடியும். (குறுக்கீடு).

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் படித்தாலே புரியும். மூன்றும் நான்கும், இரு அமைச்சர்களுடையதாக இருந்தாலும்கூட, இரண்டு பத்தியும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளச் சொன்னதற்கு பின்னால் விவாதம் முடிந்ததற்குப் பின்னால், தனித்தனியாக எடுத்துக்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளக் கோருவது இரு அமைச்சர்கள். ஒரே அமைச்சர் கோரலாம். ஒரே அமைச்சர் என்றால் அந்த மாதிரி எடுத்துக் கொள்ளுமாறு அவரைக் கேட்டுக் கொள்ளலாமே தவிர, ஒரு அமைச்சர் ஒரு சட்டமுன்வடிவை முடிப்பதற்குள் இன்னொரு அமைச்சர் தொடர்புடையதை எடுக்க முடியாது. ஆகவே, நீங்கள் விவாதிக்கின்றபோது, உறுப்பினர்கள் பேசுகின்றபோது, அதைச் சேர்த்துப் பேசுகிற மாதிரி வைத்துக்கொள்ளலாம்.